திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மாநகராட்சியில் தீ விபத்து ஏற்பட்ட சிட்டி மருத்துவமனைக்கு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் ஆகியோர் சென்று மீட்பு பணிகளை பார்வையிட்டு அங்கிருந்த நோயாளிகளை உடனடியாக அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்து சிறப்பான சிகிச்சை அளிக்க மருத்துவர்களுக்கு உத்தரவிட்டனர்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை!

சென்னை கிழக்கு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலஉதவிகள்!

டி.கே.எஸ்.இளங்கோவன் - தீபக்நாதன் வழங்குகின்றனர்!

சென்னை, டிச.14-

சென்னைகிழக்குமாவட்ட இளைஞர்அணிசார்பில்கழகப் பொருளாளர்டி.ஆர்.பாலுஎம்.பி, மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர்முன்னிலையில்எஸ்.கே.கோவிந்தன் தலைமையில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு - மாற்றுத்திறனாளிகளுக்கு கழக செய்திதொடர்புக் குழு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன்மற்றும்டிசம்பர் 3 இயக்கம் மாற்றுத்திறனாளிகள் நலவாரியம் பேராசிரியர் தீபக்நாதன் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.

இதுபற்றிய விவரம் வருமாறு :-

சென்னைகிழக்குமாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்21, போர் தொடுக்கும் இளம் தலைவர்! தோள்கொடுக்கும் துணை முதல்வர்! எனும் தலைப்பில் மாற்றுத்திறனாளிகளுக்குநலத் திட்டஉதவிகள்வழங்கும்விழா இன்று (14.12.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், சென்னை, அண்ணாநகர், இ.எஸ்.ஐ. பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில் அம்த்தூர் தெற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்தலைமைவகிக்கிறார். கழக பொருளாளர்டி.ஆர்.பாலுஎம்.பி,சென்னைகிழக்குமாவட்டக் கழகசெயலாளரும்,இந்துசமய அறநிலையத்துறை (ம) சென்னைபெருநகரவளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால்எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், டி.லோகேஷ்,எல்.பி.எப்.மோகன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமாஎம்.சி, வி.ரமேஷ்(எ)நீலகண்டன்எம்.சி, ஜெ.பாலமுருகன், கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம் முன்னிலைவகிக்கின்றனர்.பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, என்.பி.எம்.வசந்த், இரவை பிரபு, தி.ஜெயபால், என்.பி.எம்.வசந்த், இரவை.பிரபு, தி.ஜெயபால், எஸ்.சௌந்தர்ராஜன் (எ) ராஜா,எம்.மணிகண்டன்,எ.வ.சாந்தகுமார், டி.புருஷோத்தமன், எஸ்.சந்திரசேகர்வரவேற்கின்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் மாற்றுத்திறனாளிகளுக்குகழக செய்தி தொடர்புக்குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும்டிசம்பர்3இயக்கம்மாற்றுத்திறனாளிகள் நலவாரியம் பேராசிரியர் தீபக்நாதன் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கின்றனர்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில், சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, பி.முனியாண்டி,பரங்கநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன்,கே.சந்துரு,சி.மகேஷ்குமார்,சங்கரிநாராயணன், தமிழன்பிரசன்னா, என்.மணிமுடி,வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன்,எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி, கோ.ஏகப்பன், வி.மகாதேவன் புனிதவதிஎத்திராசன்,இசட்ஆ சாத் எம்.சி, கூபீஜெயின், ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ்குமார். பகுதி கழக செயலாளர்கள்: வே.வாசு, ஐ.சி.எம்வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி. பொதுக்குழுஉறுப்பினர்கள்: கோ.மணி, எஸ்.பன்னீர்செல்வம்,டி.வி.செம்மொழி எம்.சி, பி.ஜே.துளசிங்கம், பி.உதயசங்கர், சாவித்திரிவீரராகவன், எம்.இப்ராஹிம்கனி, அ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி. மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: வானவில் விஜய், நா.துலுக்காணம், ஜி.தாமோதரன், துரைகண்ணன், சுதாதீனதயாளன் எம்.சி, ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, பி.விஜயமார், எம்.பெரோஸ்கான், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், க.பா.பிரதீப்குமார். ம.அசோக்குமார்,எஸ்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, இரா.வீரமணி. அம்பத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: எம்.இ.சேகர் எம்.சி, உஷாநாகராஜ் எம்.சி, கே.பொற்கொடி எம்.சி, எம்.கமல் எம்.சி. அம்பத்தூர்தெற்குவடக்குகிழக்குபகுதி வட்ட கழக செயலாளர்கள்: இரா.டீக்கா,த.பிரகாஷ்குமார், சி.சீனிவாசன், வீ.ரவீந்திரன், பு.வீரா, வெ.ராதாகிரு ஷ்ணன், மு.இரகு, த.கண்ணபிரான், மு.சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், சீ.லோகநாதன்,மோகன்குமார், மு.விஜயகுமார்,த.வ.லால்ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்டகழக செயலாளர் நெப்போலியன் நன்றி கூறுகிறார்கள்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் திண்டுக்கல் சிட்டி மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டு தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நபர்களை நேரில் பார்வையிட்டு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டில் நிவாரண உதவித்தொகையை வழங்கினார்கள். அருகில் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிப கழகம் / திண்டுக்கல் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் முனைவர் ச.விசாகன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.அ.பிரதீப், பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் திரு.ராஜப்பா உட்பட பலர் உள்ளனர்.

வட்டச் செயலாளர் அ.மோசஸ் ஏற்பாட்டில்! ஆத்தூர் சபரி - வாலாஜா இரா.தமிழ்வாணன் பங்கேற்பு!

மதுரவாயல் 151வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா - பொதுக்கூட்டம்!

டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, டிச.14-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 151-வது வட்டக் கழக செயலாளர் அ.மோசஸ் ஏற்பாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதய நாள் விழா தெருமுனைக் கூட்டம் இன்று (14.12.2024) மாலை 6.00 மணியளவில் போரூர், லட்சுமி நகர் 40 அடி சாலை, கருமாரியம்மன் கோயில் தெரு அருகில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கழக பொருளாளர், நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவர் டி.ஆர். பாலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, தலைமை கழக பேச்சாளர்கள் ஆத்தூர் சபரி, வாலாஜா இரா.தமிழ்வாணன். மதுரவாயல் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பி.டி.பாண்டி செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்று கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ச.சங்கர்கணேஷ் எம்.சி., மாவட்ட பிரதிநிதி வி.விஜயன், வட்ட கழக நிர்வாகிகள் செ.இராமையா, எஸ்.விமலாசேகர், கே.முரளி, ம.சிவா, வி.பன்னீர்செல்வம், எம்.லோகேந்திரபாபு, கோ.கண்ணதாசன், கே.குமார், எம்.சுந்தர், ப.சரவணன், எஸ்.ஆர்.முரளிகிருஷ்ணன், பி.கே.சண்முகம், ஏ.ஆனந்த், வி.பாலு, எம்.நாகராஜ், க.தீபன், ஆர்.ராஜேஷ், ஆர்.மணிமாறன், ஜே.குப்பன், கே.யாகோப், ஏ.மதனகோபால், க.சேகர், வழக்கறிஞர் எம்.பிரசாத், தட்சிணாமூர்த்தி, மணிகண்டன், கோவிந்தராஜ், கே.ராஜா, எம்.ஐயப்பன், எம்.ஜார்ஜ்முல்லர், நடராஜன், பி.சதீஷ், இ.செந்தில்குமார், பி.ரோஸ்லின், பால்பத்மநாபன், எம்.கனகா, கே.காஞ்சனா, வி.வினோத், வி. வனிதாகுமாரி, ஐ.வசுமதி, கிறிஸ்டி பெர்னாண்டஸ், மு.தங்கராஜ், ஏ. சுரேஷ், பி.ரமேஷ், முருகதாஸ், ஆட்டோ கருணாநிதி, வழக்கறிஞர் ஆனந்த், வழக்கறிஞர் சுரேஷ்குமார், பி.முத்து, கே.கமலக்கண்ணன், ரிச்சர்ட், தினேஷ், பிரேம்குமார், வழக்கறிஞர் என்.முத்தழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர், 11வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி., வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாச்சலம், தலைமை பொதுக் குழு உறுப்பினர் வ. செல்வகுமார், எம்.சி., மாவட்ட அமைப்பாளர்கள் வி.ராஜேஷ், ஏ.விஜயபாலா, பகுதி கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால் பாண்டியன், எஸ்.பாரதி, எம்.சி.

கே.ராஜி, எம்.சி., இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் செ.ரவி, மாவட்ட தொழிலாளர் பிரதிநிதி ஆர்.சேகர், அணி பகுதி அமைப்பாளர் பூத்தப்பேடு பி.ரகு, வட்ட துணை செயலாளர் கே.முரளி, வட்டக் கழக செயலாளர்கள் எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், சி. சுந்தர், தி. சார்லஸ், ஏ.செல்வம், மாமன்ற உறுப்பினர்கள் ஹேமலதா கணபதி, எம்.சி., செல்வி ரமேஷ், எம்.சி., சாந்தி ராமலிங்கம், எம்.சி.,

மதுரவாயல் தெற்குப் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆட்டோ கிருஷ்ணன், பி.பரிமளா, டி.துரை, ஜெ.விஜயன், கே.உதயன், செ.ராஜா, இ.இளங்கோ, எல்ஐசி நாகராஜன், கே.பாஸ்கர், எஸ்.அன்பு செல்வி, ஏ.சூசைராஜ், எஸ்.சுந்தரமூர்த்தி, ஆர்.கருணாகரன் மற்றும் வட்டக் கழக செயல்வீரர்கள் , பாக முகவர்கள், பாக நிலை உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள், அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

பகுதி சமூக வளைதள ஒருங்கிணைப்பாளர் இ.பிரசாந்த், வட்ட பிரதிநிதி எல்.சீனு ஆகியோர் நன்றியுரையாற்றுகிறார்கள்.

துணை முதலமைச்சர் – கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி திருவள்ளூர் மத்திய மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி தி.மு.க. சார்பில் எளியோர் எழுச்சி நாள் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஆர்.பிரவின் குமார் ஏற்பாட்டில் பட்டாபிராம் காவல் நிலையம் அருகில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் பேச்சாளர்கள் ஈரோடு இளைய கோபால், சிலம்பரசன், மாவட்ட கழக நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், மா.ராஜி, எஸ்.ஜெயபாலன், காயத்ரிஸ்ரீதரன், பா.நரேஷ்குமார், சன்பிரகாஷ், பொன் விஜயன், ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், ஜெ.மகாதேவன் , காஞ்சனா சுதாகரன், டி. தேசிங்கு ப.ச.கமலேஷ், ஜி.ஆர். திருமலை, மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் ஜி.பாபு, சாருக் சபரத், சக்தி பிரியதர்ஷினி, சூரிய பிரகாஷ், சாரதா தேவி, சுரேந்தர், ரித்தீஷ் கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள், பலர் கலந்து கொண்டார்கள்.

நாட்டில் உள்ள

நூலகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச. 14 -

நாட்டில் உள்ள நூலகங்களின் தரத்தை உயர்த்தவும் எண்ணிக்கையை அதிகரிக்கவும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்றத் தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

நாட்டில் உள்ள நூலகங்களின் தரத்தை உயர்த்தவும், எண்ணிக்கையை அதிகரிக்கவும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?

நூலகங்களுக்கான தேசிய இயக்கத்தின் கீழ், தமிழ்நாடு உட்பட நாட்டில், மாநிலவாரியாக, மத்திய நூலகங்கள் மற்றும் மாவட்ட நூலகங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

நாட்டில் நூலகங்களை அமைப்பதற்காக இதுவரை வழங்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதி உதவி விவரங்கள் யாவை?

தமிழ் நாட்டில் சரஸ்வதி மஹால் நூலகம் மற்றும் உலகப் புகழ்பெற்ற சென்னை கன்னிமாரா நூலகக் கட்டிடத்தின் வளர்ச்சி, மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளதா, இல்லை என்றால் அதற்கான காரணங்கள் என்ன?

பதில் : ஒன்றிய அரசின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:

இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின்படி, நூலகம் ஒரு மாநில அரசின் அதிகார வரம்பிற்கு கீழ் வருகிறது. மேலும் பொது நூலகங்கள் அந்தந்த மாநில/யூனியன் பிரதேச அதிகாரிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

நாட்டில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, அந்தந்த மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் வரம்புக்கு உட்பட்டது.

நூலகங்களை அமைப்பது அந்தந்த மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் கீழ் வருகிறது. இருப்பினும், கலாச்சார அமைச்சகம் அதன் தேசிய நூலகங்கள் (NML) திட்டத்தின் மூலம், NML மாதிரி நூலகக் கூறுகளை அமைப்பதன் கீழ், ஒவ்வொரு மாநிலம் / யூனியன் பிரதேசத்தில் உள்ள 1 மாநில மத்திய நூலகத்திற்கும் 1 மாவட்ட நூலகத்திற்கும் நிதி உதவி வழங்குகிறது. சம்பந்தப்பட்ட மாநில அதிகாரிகள் மற்றும் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் உள்ள நூலகங்கள் NML திட்டத்தின் கீழ் தமிழ் நாடு உட்பட மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி விவரங்களைப் பார்க்கையில் தமிழ் நாடு மாநிலத்தில் திருச்சி ராப்பள்ளி மாவட்ட நூலகம் மற்றும் வேலூர் மாவட்ட நூலகத்திற்கு முறையே ரூ.68.16 லட்சம் மற்றும் ரூ.79.27 லட்சம் நிதி யுதவி வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

அதே நேரத்தில் சரஸ்வதி மகால் நூலகம் மற்றும் சென்னை கன்னிமாரா நூலகக் கட்டிடத்தின் வளர்ச்சி, மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்ய முன்மொழிவு எதுவும் ஒன்றிய அரசிடம் இருந்து பெறப்படவில்லை.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

சென்னை உயர்நீதி மன்ற

தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் துணைவியாரின் தாயார் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை. டிச.14-

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் அவர்களது துணைவியாரின் தாயார் திருமதி ருக்மினி அவர்களின் மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் அவர்களது துணைவியாரின் தாயார் திருமதி ருக்மினி அவர்கள்மறைவுற்றசெய்தியறிந்தமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி கே.ஆர். ஸ்ரீராம் அவர்களைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி அனகாபுத்தூரில் அடையார் ஆற்றங்கரையோரம் வசிக்கும் பொது மக்களை காத்திடும் வண்ணம் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி நேரில் சென்று பொதுமக்களை பாதுகாப்பாக தனியார் மண்டபங்களில் தங்க வைத்து அவர்களுக்கு தேவையானவற்றை செய்து மணல் மூட்டைகளை வரவைத்து கரையோரம் அடிக்கி கரையை பலப்படுத்தும் பணியை மேற்கொண்டார். அப்பொழுது மண்டல தலைவர் வே. கருணாநிதி, மாநகராட்சி உதவி ஆணையர் சொர்ணலதா, உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர், சுகாதார அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.